IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS
(As per XXIII case of Criminal procedure)
SESSIONS CASE NO. 23/2016

Deposition of witness for prosecution : PW9
Defense :

Name : சி.உமா

Husband's Name : வெங்கடேசன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.09.2022

முதல் விசாரணை

நான் தற்போது சேத்பட் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியாளராக பணி புரிந்து வருகிறேன். 2014ம் ஆண்டில் நான் ஆரணி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணி புரிந்து வந்தேன். 23.03.2014 அன்று நான் ஆரணி அரசு மருத்துவமனையில் இரவு 7.00 மணி முதல் பிரசவ வார்டில் பணியில் இருந்தேன். அரசு மருத்துவமனை அவசர பிரிவின் எதிரில் சத்தம் கேட்டு வந்து பார்த்தேன் அங்கு கூட்டாக இருந்தது சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் 30 நபர்கள் இருந்திருப்பார்கள். அதில் ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்று எனக்குதெரியாது யார் யாருக்கு சண்டை நடந்தது என்று எனக்குத் தெரியாது.

அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

நான் 23.03.2014 அன்று ஆரணி அரசு மருந்துவமனையில் பணியில் இருந்தேன் என்றும் அப்போது வெளியில் சத்தம்கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது தனசேகரன் த/பெ துரைராஜ் என்பவர் அய்யோ அம்மா என்னை அடிக்காதீர்கள் என்று அழுவும் சத்தம் கேட்டதாகவும் அவரை சுமார் 10 அல்லது11 ஆண் நபர்கள் சவுக்கு கம்பு , இரும்பு ராடு கண்ணாடி பாட்டிலை கொண்டு அடித்ததாகவும், நாங்கள்சென்று சத்தம் போட்டதும் அடித்துக்கொண்டிருந்த நபர்கள் சவுக்கு கம்புகளை அருகில் இருந்த பிணவறை எதிரில்

போட்டுவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், அடிப்பட்ட தனசேகரை ஓ.பி. ஆக மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் அப்போது எதிரிகள் தான் தன்னை அடித்ததாக தனசேகரன் என்னிடம் சொன்னார் என்றும், அடித்த நபர்கள் தாங்கள் வந்த சுமோ வாகனத்தை மருத்துவமனையிலேயே விட்டுவிட்டு ஓடி விட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.